திரு. த. சோனையா : எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதிக்கு வர பஸ் வசதி போதவில்லை, கஷ்டப்படுகிறார்கள். சட்ட மன்றம் நடக்கும் காலத்தில் எழும்பூருக்கும் சட்ட மன்ற விடுதிக்கும் தொடர்ந்து பஸ் போய்க் கொண்டிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சட்ட மன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கின்ற நேரத்திலும், சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிகின்ற நேரத்திலும் அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

Special buses to Thirunallar.

* 566 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Tamil Nadu State Transport and the Cholan Roadways Corporation have proposed to ply 'round the clock bus service' to Thirunallar for "the transit of Saturn festival"; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) திருநள்ளாறில் நடைபெற்ற சனிப் பெயர்ச்சி திருவிழாவையொட்டி சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு போக்குவரத்துத் துறையும் 8—7—73-லிருந்து 14—7—73 வரையில் தனிப் பேருந்துகளை இயக்கி வந்தன.

ஆலயங்களில் அரிசன அர்ச்சகர்கள்.

* 567 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்களில் தற்போது எத்தனை அரிசனர்கள் அர்ச்சகர்களாகப் பணியாற்றுகிறார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 42 (நாற்பத்திரெண்டு பேர்).